சென்னை – 81, டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
முதல்வரின் செயல்முறைகள்
பிறப்பிப்பவர் : முனைவர். க.சுடர்க்கொடி, எம்.ஏ, எம்ஃபில்., பி.எச்டி.,

---

**ந.க.எண். 791/ஆ/2022** **நாள். 18 .12.2023**

பொருள்: தமிழ்நாடு – கல்லூரிக் கல்வித் துறை – சென்னை–81, டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி – செல்வி.இர.பாயிஸா பானு, இளநிலை உதவியாளர் – கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டவர்– பணியினை வரன்முறைபடுத்தி ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை நிலை எண். 33, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (Q1) துறை நாள் 08.03.2023
2. இக்கல்லூரி முதல்வரின் கடித ந.க.எண். 791/ஆ/2022 நாள்.10.08.2023
3. அரசு கடித எண். 1535/ஜி2/2023–1 நாள். 30.10.2023
4. சென்னை–15, கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 1058/பி1/2023 நாள். 06.12.2023

••••••

திருத்தணி, அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி அரசு கலைக் கல்லூரியில் தமிழ் உதவிப்பேராசிரியராகப் பணியாற்றி பணியிலிருக்கும் காலத்தில் இயற்கையெய்திய திரு. இ.இரபிக் என்பவரின் மகள் செல்வி.இர.பாயிஸா பானு என்பார் இக்கல்லூரியில் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டு, 20.06.2022 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வருகிறார். பார்வை –2ல் காணும் இவ்வலுவலக கடிதத்தின்படி, அன்னாரது பணியினை வரன்முறை செய்வதற்கு ஏதுவாக கல்லூரிக் கல்வி இயக்ககத்திற்கு கருத்துரு அனுப்பப்பட்டது.

பார்வை–4ல் காணும் கல்லூரிக் கல்வி இயக்குநரின் கடிதத்தில், பார்வை–2ல் காணும் அரசு கடிதம் மற்றும் பார்வை–1ல் காணும் அரசாணையில் வெளியிடப்பட்ட, தமிழ்நாடு குடிமைப்பணிகள் விதிகள் 2023–ன் விதி 16ன்படி, கருணை அடிப்படையில் நியமனம் பெற்ற பணியாளர்களது பணியினை வரன்முறை செய்வதற்கு விதித்தளர்வு ஏதும் தேவைப்படாத நிலையில் தங்களது அளவிலேயே பணிவரன்முறை செய்யலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியர் பிறந்த தேதி 25.05.1998 என்றும் பணிநியமனத்தின்போது எஸ்.எஸ்.எல்.சி தேர்ச்சி பெற்றுள்ளதாலும், இளநிலை உதவியாளர் பதவிக்குரிய முழுத்தகுதி பெற்றுள்ளதாலும், உரிய வயதினை நிறைவு செய்துள்ளதாலும், அன்னாரின் பணி நியமனத்திற்கோ, வயது வரம்பிற்கோ விதித் தளர்வாணைகள் பெற வேண்டிய நிலை எழவில்லை. எனவே, செல்வி.இர.பாயிஸா பானு என்பார் இக்கல்லூரியில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த **20.06.2022 முற்பகல் முதல் அன்னாரது பணியினை வரன்முறை** செய்து ஆணையிடப்படுகிறது.

18-12-23

முதல்வர்

முதல்வர்
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
டாக்டர். இராதாகிருஷ்ணன் நகர்,
சென்னை-600 081.
18/12/23

பெறுநர்
செல்வி.இரா.பாயிஸா பானு,
இளநிலை உதவியாளர்,
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர், சென்னை – 81.